கல்வியின் சிறப்புபற்றி கூறுவோமேயானால் கல்வி கற்றவன் தரணியில் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிறருக்கு மதிக்கப்படுகின்றான். இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியேயாகும். கல்வியறிவுள்ளவர்களே கண்ணுடையவர், மற்றவர்கள் கண்ணிருந்தும் இல்லாதவர்களே என்று திருவள்ளுவர் கூறினார். மனிதனிடத்திலுள்ள அறியாமை என்ற இருளை நீக்கி அறிவொளியை வழங்குவது கல்வியே ஆகும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்கவேண்டியவற்றை கற்று கற்ற நெறிப்படி அதற்கு வேண்டும் என்பதனையே

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்று திருவள்ளுவரும் தமது திருக்குறளின் கல்வி அதிகாரத்தில் கூறியுள்ளார்.

உலகத்தில் அழியாத பெருமையும், புகழையும் தரக்கூடியது கல்விச்செல்வமே அன்றி வேறில்லை என்பதை நாம் எப்போதும் மறவாது இருக்க வேண்டும். கல்வி கற்றவர்களிடத்தில் அடக்கம், பண்பு, நீதி, நேர்மை போன்ற அனைத்தும் நிறைந்து அமைந்து காணப்படும். அதுமட்டுமல்லாமல் அவர்களை நல்வழியில் செலுத்துவதும் கல்வியறிவேயாகும்.

பெற்றோர்களும் நாம் கற்ற கல்வி அவர்களுக்கு மட்டுமல்லாது அவர்கள் வாழும் சமூகத்திற்கும் தேவைப்படுகின்றது. இதனையே ஔவையார் "குடியுயரக் கோனுயர்வான்" என்றார். தனி மனிதனிடமிருந்து ஏற்படும் கல்வியறிவு சமூக வளர்ச்சியினை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது. எனவே அனைவரும் கல்விச் செல்வத்தைப் பெற்று இவ்வையகத்துள் வாழ்வாங்கு வாழ முயற்சி செய்வோம்.

விகாஷன் விஜயரட்ணம் (ஆண்டு 8)
Vihashan Vijayaratnam - Year 8

Kalvyin Sirappu Year 8 student

கவிதை

## வளமாக நீ வளர்ந்திட...!

மூவிரண்டு சிறார்களுடன் ஆரம்பித்து
மூவைந்து வருட அயராத உழைப்பினில்
முத்தமிழையும் முறையாய் பயிற்றுவித்து வரும்
கொவன்றி தமிழ்ப் பாடசாலையே!

கண்ணியமாய் கடமை புரியும் ஆசிரியர்கள்,
பண்பாடு காத்து வரும் மாணவர்கள்,
தன்னலமே கருதாத நிர்வாகத்தையும் கொண்ட
கொவன்றி தமிழ்ப் பாடசாலையே!

பட்டமளிப்பு பெற்று வரும் "சான்றிதழ்கள்",
பதக்கங்கள் பல பெற்ற சிறார்களையும்,
"அரங்கேற்றம்" கண்ட மாணவ மணிகளையும் கொண்ட
கொவன்றி தமிழ்ப் பாடசாலையே!

புலத்திலே உன் தமிழ்ப் பணி தொடர்ந்திட,
பல நூறு மாணவர்கள் தமிழ் கற்றிட,
வளமாக நீ வளர்ந்திட — எங்கள்
உளமார்ந்த நல் வாழ்த்துக்கள்!

* ——— *

திருமதி. ஜெயா சிவநேசன்

Kavithai

## முயற்சி

அலை அலையாய்த் துன்பங்கள்
அடுத்து அடுத்து வந்தாலும்
மலை போல உறுதியுடன்
மண்ணில் வாழப் பழகுவோம்.

கடமை தன்னைக் கண்ணாகக்
கருதி என்றும் உழைத்திட்டால்
காற்றைப் போல விரைவாகக்
கவலைகள் யாவும் மறைந்திடும்.

முயற்சி என்றும் உயர்ச்சிதரும்
முன்னோர் சொன்ன மொழியிதுவே
முயற்சி கொண்டு உழைத்திடுவோம்
முன்னேற்றத்தை நாடிடுவோம்.

– Dinashan
& Hapisun (Year-4)

## நவராத்திரி விழா

நவராத்திரி என்றால் ஒன்பது நாட்கள் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்களின் அருளை வேண்டி இந்துக்களால் விரதமிருந்து அனுட்டிக்கப்படும் விழாவாகும்.

நவராத்திரி பூசை புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமை தொடங்கி நவமியில் முடிவடைகிறது.

இந்த நாட்களில் முதல் மூன்று நாட்களும் துர்க்கை அம்மனை வேண்டியும் அடுத்த மூன்று நாட்களும் லக்ஷ்மியை வேண்டியும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி தேவியை வேண்டியும் வழிபாடு செய்யப்படும்.

இறுதிநாளான பத்தாம் நாள் விஜயதசமி ஆகும். இது சிறுபிள்ளைகளுக்கு அன்னம் ஊட்டுதல், ஏடு தொடக்குதல், கலைகளை கற்க ஆரம்பிப்பதற்கு உகந்த நாளாகும்.

இவ் விஜயதசமியை எமது தமிழ்ப் பாடசாலையில் மிகவும் சிறப்பாக கொண்டாடுவார்கள். அன்று சிறுவர் வேட்டி அணிந்து கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்பார்கள் இறுதியாக பல வகையான உணவுகள் பரிமாறப்படும்.

தமிழ் பாடசாலையில் நிகழும் விழாக்களில் இவ் விழா எனக்கு மிகவும் பிடித்த விழாவாகும்.

லக்ஷ்மிதா [illegible]
வகுப்பு 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தமிழ் ஏன் கற்க வேண்டும்?

நாயகத்தில் ஏற்பட்ட இன்னல்கள் காரணமாக எமது இனம் உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறது. அந்நியச் சூழலில் நாம் வாழ வேண்டியுள்ளது. "நாம் தமிழ் ஏன் கற்க வேண்டும்?" என்ற கேள்வி புலம்பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழ்க் குழந்தைகளின் மனதிலும் (அவர்கள் வெளியில் சொல்கிறார்களோ இல்லையோ?) தோன்றக்கூடிய கேள்விதான்.

தமிழ்மொழி தொன்றுதொட்டுத் தொடரும் ஒரு பெரும் கலாச்சாரத்தில் நின்று நிலைக்கும் ஒரு மகத்தான கூறு எனவே
யாதும் ஊரே யாவரும் கேளிர்..."
என்ற சங்கப் புலவர் பாடல் விளக்குகின்றது. இன்று வாழும் நாடும் மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜப்பானிய மொழி ஆகிய அனைத்திலும் அந்தந்த நாகரிகங்களின் கலாச்சாரத் தொடர்ச்சி பேணப்படுகிறது. பிறமொழி அறிவு, தாய் மொழியின் செம்மையை அறியப் பெரிதும் துணை செய்கிறது. தமிழ் மொழியுடன் பிற மொழிகளைக் கற்பது தமிழ் மொழிக்கு அதுசெழுமை சேர்ப்பதாக அமையும்.

கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், தேவாரம் இது போன்ற பண்பாட்டு வேர்களை விட்டு வெறும் இலக்கண வார்த்தைக் கோர்வைகளாக மட்டுமே தமிழ் கற்பிக்கப்படுமானால் எமக்கு ஏன் தமிழ் படிக்க வேண்டும்? என்ற கேள்வி ஏன் எழாது? மொழியுடன் கூடிய நமது கலாச்சார மதிப்புகள் கற்றுத் தரப்படவில்லையெனில் அதற்குப் பதிலாக ஜப்பானிய அல்லது ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். ஆகவே தமிழ் ஏன் கற்க வேண்டும் என்ற கேள்விக்கான பதில் பண்பட்ட தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலேயே அடங்கியுள்ளது.

(ம.ப.ஶ)

மண்ணைப் பிரிந்து வேற்றிடம் வளரும் எமது அடுத்த தலைமுறைக்குத் தங்களது வரலாறு, மரபு மற்றும் பண்பாட்டின் தொடர்ச்சி குறித்த பெருமிதம், விளக்கம், விழிப்புணர்வு தேவை. இன்னைப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சுமந்து நமக்குத் தரும் தமிழ்மொழி மீது எமக்கு உண்மையான விருப்பு உருவாகும். எனவே இத்தகைய பெருமிதமும் விளக்கமும் விழிப்புணர்வும் தரும் வகையில் தமிழ்மொழி குறித்த அறிவை எமக்கும் அடுத்த தலைமுறைக்கும் தரவே பதினைந்து வருடங்களாகக் கேணி தமிழர் நலன்புரிச் சங்கத் தமிழ்ப் பாடசாலை அரும்பாடுபட்டு வருகின்றது. அவர்களின் முயற்சியைப் பாராட்டுவோமாக.

வணக்கம் அபிசன் முகுந்தன், ஆண்டு 7

## செய் நன்றி மறவாமை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
என்றார் திருவள்ளுவர். எமது மனங்களைத் தொடும் திருக்குறளாகும். எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு, ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வே இல்லை. இதுவே இத்திருக்குறளின் பொருளாகும்.

இத் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக எம் கண் முன்னே உடனே தோன்றுபவர் கர்ணன். இவர் மகாபாரதத்தில் முக்கியமானவர். தேரோட்டியின் மகன் என்பதால் அரச அவையினர் அவரை வில்வித்தைப் போட்டியில் பங்கு பற்ற முடியாது என்று கூறும்போது அவமானத்தில் உருகி நிற்கிறார். அவ்வேளையில் துரியோதனன் கர்ணனை அங்க தேசத்து மன்னாக்கி தலை நிமிரச் செய்கிறார். அன்றிலிருந்து செஞ்சோற்றுக் கடனுக்காகவே அறநெறியற்று வாழும் துரியோதனன் பக்கமே நிற்கின்றார். பிழையான வழியில் செல்கிறோம் என்று தெரிந்தும் செஞ்சோற்றுக் கடனுக்காகவே தனது உயிரையும் தியாகம் செய்தார்.

அடுத்து தமிழ் சிறுவர்களாகிய எம் எல்லோருக்கும் தெரிந்த தமிழ்ப் பண்டிகை தைப் பொங்கல். தைப் பொங்கலை ஏன் கொண்டாடுகிறோம்? நாம் பயிரிடும் பயிர்கள் வாழவும், நாம் உண்ண உணவு கிடைக்கவும், ஒளி தரும் சூரியத் தேவனுக்கு செய் நன்றி மறவாது நன்றி செலுத்தி கொண்டாடுகிறோம்.

இன்று சமகாலத்தில் பார்ப்போமானால், எமது மண்ணை மீட்க தமது இன்னுயிரை கொடுத்த மாவீரர்களை நினைக்காமல் இருப்பதும் மிகப் பெரிய செய்நன்றி மறத்தல் ஆகும். உதாரணத்திற்கு திலீபன் மாமாவை, என் போன்ற சிறார்கள் எத்தனை பேருக்குத் தெரியும்! நீர் கூட அருந்தாது எமது மண்ணுக்காக தன்னைக் கொடுத்தவர். தியாகத்தின் மறுபெயர் திலீபன் மாமா ஆவார். இப்படியான வரலாற்று தியாகங்களை எமக்கு கூறி, செய் நன்றி மறவாது வாழவைக்கும் கடமை பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கைகளிலேயே உள்ளது.

இந்நாட்களில், செய்நன்றியை மறந்து வாழும் நிலை எம்மில் சிலருக்கு வருவது போல் தெரிகிறது. அப்போ இதற்கான தீர்வு தான் என்ன? பெற்றோர் தான் எமது கதாநாயகர்கள். அவர்கள் தான் அதற்கான முன்னுதாரணமாக செய் நன்றி மறவாது வாழவேண்டும். அவர்கள் இதை சிறுவயதில் இருந்தே எமக்கு பதிய வைக்கும் போது எமது நாளைய சமுதாயம் நல்ல சமுதாயமாக உருவாகும். எம்மத்தியில் நல்ல பண்புகளை, போதனைகளை பசும் மரத்தாணி போல புகட்டும் கடமை, பெற்றோருக்கு மட்டுமல்ல, பாடசாலைகளினதும், தமிழ்க் கட்டமைப்புக்களினதும் ஊடகங்களினது கடமையும் கூட.

"நாம் வாழுங் காலமும் செய் நன்றி மறவாது
வாழுவோமாக."

லக்கியா இரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெட்டிக்காரப்பூனை

எங்கள் வீட்டுப் பூனை
எவரும் விரும்பும் பூனை
பாங்காய் பாலைக் குடிக்கும்
பதுங்கி எலியைப் பிடிக்கும்.

பரணில் ஏறித் தூங்கும்
பாசமாகக் கத்தும்
குறும்புத் தனங்கள் செய்யும்
கெட்டிக் காரப் பூனை.

பே.அனந்தியா - வகுப்பு-3

## என் மண்ணை தரிசிக்க ஆசை

பச்சைப் பசேல் வயல் வெளியை
பார்த்து ரசிக்க ஆசை
வரம்பின் விளிம்பில்
நடந்து திரிய ஆசை
தங்க நிற நெற்கதிரை
கொய்து விட ஆசை
புது நெல்லு எடுத்து - என்
முற்றத்தில் பொங்கி விட ஆசை


வாய்க்காலில் குளித்து விட ஆசை
தாமரை மலரை தண்ணீரில்
பார்த்து விட ஆசை
முற்றத்து மணலில்
வீடு கட்ட ஆசை
கரும்பைக் கடித்து சுவைத்திட ஆசை
பாலைப்பழமும் பலாப்பழமும்
பறித்து சுவைக்க ஆசை

அம்மா அப்பா படித்த பள்ளியில்
ஓர் நாள், படித்து விட ஆசை
மொத்தத்தில் ஈழம் விளையும்
என் மண்ணை தரிசிக்க ஆசை

நன்றி

ஜெரியன் சுதானந்தன்
ஆண்டு 4

பவநிலா 3



நமகளின் புன்னகை போல
பூத்திடு வோமே - தம்பன்
பாமணக்கும் சுமிழினைப் போல
பரிமளிப் போமே!

வண்ண வண்ணச் சேலை கட்டி
மகிழ்ந்திருப்போமே - இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
மாறச் செய்வோமே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழிப் பயணத்தில்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"
என்ற பாரதியின்

கூற்றுக்கமைய புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ் மொழியையும் கலை கலாசாரத்தையும் அறிய வேண்டிய பாரிய காலத்தின் [illegible] [illegible] உருவாக்கும் தமிழ்ப்பாடசாலை வளர்ச்சிகளிலே உன்னதமான ஓர் இடத்தை பிடித்துள்ளது "கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்" என்றால் மிகையாகாது.

கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் 2002ம் ஆண்டு பிரித்தானியாவில் கொவன்றியில் பதியப் பல பிரமுகர்களால் உருவாக்கப்பட்டு, இதுவரை பெரும் வெற்றி நடை போடுகின்ற [illegible] [illegible] [illegible] அர்ப்பணிப்புடன் "கற்றதுபோல் அறிவுறுவோம்" என்பது மறுக்க முடியாத உண்மை. 2002ம் ஆண்டு நான்கு மாணவர்களுடன் சிறியதாக ஆரம்பித்த இப்பாடசாலை படிப்படியாக முன்னேறி இப்போது 100 மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று பெரு விருட்சமாக வளர்ந்து, பிரமாண்டமாகக் காட்சியளிக்கின்றது. பல மாணவர்கள் கல்வி பயில அர்ப்பணிப்புடன் பல ஆசிரியர்கள் பணியாற்றித் தொண்டுகின்றனர் [illegible]

ஆண்டு தோறும் கலைவிழாக்கள் மாவீரர் தினங்கள் தமிழ்த்தின போட்டிகள் போன்றவற்றை நடத்தி பிள்ளைகளை மகிழ்ச்சியாக இணைந்ததாக இருப்பதும் தமிழ்க்கலாசாரத்தின் நடையுடை பாவனைகளையும் தெரியப்படுத்துகின்றது.

தாய்மொழியான தமிழையும் கலை கலாசாரத்தையும் அறியவிடாது போனால் பாதகமாய் மிக அவசியமாகும் இன்றைய எதிர்கால சந்ததியை உருவாக்குவதில் கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் முதன்மை பெறுகிறது.


இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மொழி நம் தாய்மொழியாம் தமிழ்மொழி. தாய்மொழி என்பது ஓர் இனத்தின் தனித்துவமான அடையாளம். கலாசாரம் என்பது ஓர் இனத்தினை என்றென்றும் பேணிக்காத்து நிற்கும் ஓர் சிமாசனம்.

இப்படியாக தமிழையும் கலைகலாசாரத்தையும் வளர்த்து இன்று 15 ஆவது ஆண்டில் காலடி வைக்கும் எமது கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் பணி மேலும் மேலும் வளர வாழ்த்தி வணங்குகிறோம்.

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

ஆக்கம்
திருமதி ரஜனி உதயசேகரன்
(ஆசிரியர்)

# வயலின்



வயலின் ஒரு மேற்கத்திய மற்றும் கர்நாடக இசைக்கருவியாகும். வயலின் ஒரு தந்தி வில் வாத்தியமுமாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு இது ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு இசைக்கருவியாகும்.

இசைக்கலைஞர் ஸ்டாடிவாரிஸ், ஒரு இத்தாலிய இசைக்கலைஞர் ஆவார். இவரால் வயலின் கண்டுபிடிக்கப்பட்டது.வயலின், மாப்பிள், சாக்ரோம், வெள்ளி ஒக், சிடார் மற்றும் தளிர் போன்ற சிறப்பு வகை மரங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. எபோனி மரம், பேர்னம்பூக்கோ, பிரேசில் மரம் மற்றும் பீச் மரம் ஆகியவை வயலின் பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

குன்றக்குடி வைத்தியநாதன் இந்தியாவில் புகழ்பெற்ற இந்திய வயலின் அறிஞர்களில் ஒருவர் ஆவார். அவர் பல பக்திப் பாடல்களையும், சினிமாப்பாடல்களையும் வயலினில் வாசித்துள்ளார். அவர் இந்த சிறந்த கருவியில் அவரது சிறப்பை நிரூபித்து பல இளைய வயலின்இசைக்கலைஞர்களுக்கு உத்வேகம் அளித்துள்ளார்.வயலின் காதுக்கு இனிமையான, மகிழ்ச்சியான ஒலியைக் கொடுக்கவல்லது. இந்த கருவியை மிகவும் பிரியமாக கற்றுக்கொள்கின்றேன்.

வயலினி மாணவர்கள்

# வீணை



வீணை ஒரு நரம்புக்கருவியாகும். வீணை கல்வியின் தெய்வமாகிய சரஸ்வதியின் இசைக்கருவியாக அறியப்படுகிறது. இது பெரும்பாலும் பலா மரத்தினால் செய்யப்படும். இதன் ஒலியைக் கொடுக்கும் பாகம் குடம் எனப்படும். இத்துடன் யாழிமுகமும் உண்டு. சுரைக்காய் ஒரு தாங்கியாகவும்,நாதத்தை பலப்படுத்தவும் உதவுகின்றது. வீணையில் உலோகத்தினாலான 7 தந்திகள் உள்ளன. வீணையில் எல்லாமாக 3 ஸ்தாயிகள் வாசிக்கலாம். ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட ஸ்வரங்களை வாசிக்கலாம்.

குடம், மேற்பலகை, தண்டி, மாடச்சட்டம், சுரைக்காய், பிரடைகள், யாழிமுகம், மேளச்சட்டம், மெழுகுச்சட்டம், 24 மெட்டுக்கள், குதிரைகள், லங்கர், நாகபாசம் ஆகியவை வீணையின் பாகங்களாகும்.

இராஜேஸ் வைத்தியாவீணை வாசிப்பதில் திறமையனவர்களில் ஒருவர். அவரின் வீணை இசைக்கச்சேரிகள் பிரபலமானவை. அவர் வீணையினால் பிரபலமான வெற்றிகளைக் கொன்ற பல ஆல்பங்களை உருவாக்கியுள்ளார். வீணையில் இருந்து வரும் நாதம் மிகுந்த மகிழ்ச்சியும் தருகிறது. நீங்கள் வீணையை வாசிக்க ஆரம்பித்தால் நீங்கள் அதை நிறுத்த விரும்பமாட்டீர்கள்.

**வாரணி சரவணதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழியின் பெருமை

நம் தாய்மொழி தமிழ். அதை உயர் தனி செம்மொழி என்று கூறலாம். மற்ற மொழிகளினின்று உயர்ந்த மொழி, தனித்து இயங்கும் மொழி, செம்மையான மொழி என எளிதாக இதன் பொருளை அறியலாம். தமிழ் என்றால் அழகு, இனிமை, இளமை.

தமிழில் திருக்குறள் எனும் உயரிய நூல் தோன்றி 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. உலகத்தில் பைபிளுக்கு அடுத்ததாக மொழிபெயர்க்கப் பட்டது திருக்குறள் ஆகும் என்ற பெருமை உள்ளது. இராணி விக்டோரியா காலையில் எழுந்த உடனே ஒவ்வொரு நாளும் திருக்குறளை படிப்பார்.

வீரமாமுனவர் தமிழுக்குத் தொண்டாற்றிய மேனாட்டவர். வீரமாமுனிவர் தமிழில் 5 எழுத்துக்களை சீரமைத்துள்ளார். இவர் ஒரு அகராதி(சதுரகராதி) ஒன்றையும், பிற இலக்கண, இலக்கியப் படைப்புகளையும் தந்துள்ளார் (தேம்பாவணி, பரமார்த்தகுரு கதைகள்).

தமிழ் ஒரு பக்தியான மொழி, மனித இரக்க உணர்வைப் பெருமிதமாகப் போற்றும் அன்புமொழி. உலகில் வேறு எந்த மொழியிலும் காணக்கிடைக்காத அளவு பக்திப்பாசுரங்கள் நிரம்பிய மொழி தமிழ் ஒன்றே.

தமிழும் ஒரு மேன்மையான மொழி. தமிழில் இருந்து 1800 வருடங்களுக்கு முன்னர் தெலுங்கு பிரிந்து போனது. 1500 வருடங்களுக்கு முன் கன்னடம் பிரிந்தது. வெறும் 500 வருடங்களுக்கு முன் தமிழில் இருந்து மலையாளம் வந்தது.

எந்த ஒரு மொழி மாற்றத்திற்கோ அல்லது மென்மேலும் வளர்வதற்கு இடம் கொடாமல் இருக்கிறதோ அது இறந்த மொழியாக கருதப்படும், எந்த மொழி தொடர்ந்து காலத்திற்கு ஏற்ப தனக்குள் மாற்றத்தை ஏற்றுக் கொள்கிறதோ அது வாழும் மொழியாக கருதப்படும். இதற்கு ஏற்றவாறு புதிய சொற்களை உருவாக்கப் பட வேண்டும். தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் இதில் ஈடுபட வேண்டும். என்னைப் போன்ற சிறார்களும் தமிழை படித்து பேசி அடுத்தடுத்த சந்ததிகளுக்கு தமிழின் பெருமைய கொடுக்கவேண்டும்.

நன்றி வணக்கம்!
அஜசன் முகுந்தன் ஆண்டு 8
அகவை : 14



## வள்ளுவரின் பார்வையில் விருந்தோம்பல்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி [illegible] பாரதி.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என [illegible] அடிகளில் வாழ்க்கையின் [illegible] வள்ளுவனைத் [illegible]. இவரால் இயற்றப்பட்ட திருக்குறளானது அறம், பொருள், இன்பம் ஆகிய பெயர்களில் 133 அதிகாரங்களாக [illegible] மொத்தம் 1330 குறட்பாக்களாக மனித வாழ்வின் இலக்கணத்தை விளக்கியதாக அமைந்துள்ளது. [illegible] உலகம் [illegible] போல் நம் உள்ளங்களில் [illegible] வள்ளுவனார் [illegible] உலகிற்கு உணர்த்திய உத்தமராவார்.

கணவன் மனைவி மனம்புரிந்து கொண்டு இல்லறத்தை நடத்துவதே இல்லறம். இது [illegible] இவ் இல்லறம் இனிது [illegible] கணவன் மனைவி [illegible] ஒற்றுமை இருக்க வேண்டும். ஒற்றுமையுடைய தம்பதிகளின் வாழ்வில் தான் இன்பம் நிலைக்கும்.

இல்லறத்தை [illegible] "இல்லறவியல்" என்ற இயலை [illegible] அதிகாரங்களாக வகுத்து, அவ்வொரு அதிகாரங்களிலும் ஒரு சிறந்த இல்லறத்தான் இவ்வுலகில் ஆற்ற வேண்டிய முக்கிய கடமைகளை வலியுறுத்தியுள்ளார். இவ் இல்லறத்தை இனிமையாக்கும் சக்தி வாய்ந்த மனைவியை வள்ளுவர் "வாழ்க்கைத் துணை" என சிறப்பித்துள்ளார்.



இவர் மனைக்குத் மாண்பும் கணவன் வாழ்க்கைக்கு ஏற்ற வாழ்வும் பெற்றவளாய் இருப்பாள் என்கிறார்.

இல்லறம் நடத்துபவர்களின் முக்கிய பண்பினை வள்ளுவர் "விருந்தோம்பல்" என்ற அதிகாரத்தின் வாயிலாக மிகச் சிறப்பாக கூறியுள்ளார். விருந்தோம்பல் தமிழரின் தலையாய பண்பாகும். ஒரு மனிதனின் இதயத்தைச் சென்றடைய வேண்டுமானால் அவனின் வயிற்றின் வழியாகவே செல்ல வேண்டும். பசி தீர்த்தல் ஒரு முக்கிய அறமாகும். விருந்து ஓம்பும் பண்பு ஒரு இல்லத்தின் முக்கிய நோக்கம் என்பதனை

**"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்று தமது முதல் பாடலிலேயே வலியுறுத்திவிட்டார் வள்ளுவனார்.

அடுத்த பாடலில் தன்னை நாடிவரும் விருந்தினரை வரவேற்று உபசரிப்பவனின் வாழ்வை வறுமை வாட்டாது என்றும், இனிய முகத்தோடு விருந்தினரை வரவேற்பவனின் வீட்டில் திருமகள் விரும்பி உறைவாள் என்றும் விருந்தளிப்பவனை சிறப்பித்துள்ளார் வள்ளுவர். மேலும் இவர் விருந்தளிப்பவனை சிறப்பித்த அதே நேரம் அவன் செய்யக்கூடாத செயல்களையும், அதனால் உண்டாகும் நிலைகளையும் சிறப்பாக வலியுறுத்துவதைக் காணலாம். இதனை,

**விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று**

என்ற பாடலூடாக வீட்டிற்கு வந்த விருந்தினர் வெளியே அமர்ந்திருக்க வீட்டினுள்ளே சாவா மருந்தாக இருந்தாலும் உள்ளே உணவு உண்பது விரும்பத்தக்க செயலில்லை எனக் கூறியுள்ளார். அத்தோடு விருந்தினரைப் போற்றி வரவேற்கத் தெரியாதவர்கள் அறிவற்றவர்கள் என்றும், பணமுடையவராயினும் தரித்திரம் படைத்தவர்கள் என்றும் தம் பாடல்களில் கூறியுள்ள



விருந்தளிப்பவன் அடையும் நன்மைகளைக் கூறி வந்த வள்ளுவர் வேளாண்மையின் வந்த விருந்தினரைப் பேணி இனி வரும் விருந்தினரின் இனிய வரவை எதிர்நோக்கி இருப்பானை அவன் மறுபிறவியில் வானில் உள்ள தேவர்கட்கு நல்விருந்தினராவான் என மிகச் சிறப்பித்துள்ளார் இவ் அதிகாரத்தில்.

விருந்தளிப்பவனின் நன்மை, தீமை அனைத்தையும், மற்றும் விருந்தின் தன்மை என்பவற்றையெல்லாம் இனிமையாகக் கூறிய வள்ளுவனார், இறுதியாக வீட்டிற்கு வரும் விருந்தினரின் இயல்பையும் மிக அழகாக உவமையூடாக விளக்கியுள்ளதனையும் காணலாம்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"**

அதாவது அனிச்ச மலரானது பார்க்க மிக அழகாக இருந்தாலும் அதனை முகர்ந்து பார்த்த மாத்திரத்தே அது உடனே வாடிவிடும். அதுபோல நாம் வீடு தேடி வரும் விருந்தினை இன்முகம் காட்டாது முகம் சுளித்துப் பார்த்த உடனேயே அவர்களின் முகம் வாடிவிடும் என எல்லோருக்கும் விளங்கும்படியாக கூறியுள்ளார் வள்ளுவர். மிக அருமையாக திருவள்ளுவர் "விருந்தோம்பல்" என்ற அதிகாரத்தில் கூறியிருப்பதனைக் காணலாம். இத்தகைய [illegible] உணர்வு பெறும் [illegible] போன்ற வள்ளுவரின் திருக்குறளைப் போற்றுவோம் நம் வாழ்வை செழுமையாக்குவோம்.

Mrs. சிவானந்தி தேவதாஸ்
தமிழ் ஆசிரியர் Coventry

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழா நினைவுகள் 2016










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழா நினைவுகள் 2016
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவென்ரி மக்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு!

கோபமா? கவலையா? பயமா?
மன அழுத்தமா? சுகவீனமா?

இவை அனைத்திலிருந்தும் விடுபட்டு அமைதியான,
ஆரோக்கியமான வாழ்க்கை வாழ விரும்புகிறீர்களா?

கற்றிடுங்கள்
# இராஜயோக தியானம்!
பாடநெறி முற்றிலும் இலவசம்!

இடம் : பிள்ளையார் கோயில் வளாகம்.
நேரம்: ஞாயிறுதோறும் காலை 11.00 மணி

அனைவரும் வந்து கற்று பயனடையுங்கள்
மேலும் கீழ்கண்ட இடங்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன
**Harrow, Wembly, Illford, Tooting, Southhall, Clapam, Willesden...**
Contacts: **07404727736, 07515636932**

Our main branch:
**Global Co-operation House**
**65-69 Pound Lane, Willesden,**
**London NW10 2HH**
**T: 020 8727 3350**
**W: www.brahmakumaris.org/uk**




**COVENTRY SHRI SIDHIVINAYAGAR DEVASTHANAM**
**கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்**
65A, George Eliot Road Coventry, CV1 4HT  Tel. 02476 63 22 11

20 ஜனவரி 2018

**கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் ஆசிச் செய்தி**
**தமிழர் நலன்புரிச் சங்கம் 15ஆவது ஆண்டு விழா**

சைவமும் தமிழும் தமிழர்களின் இரு கண்கள். சைவசமயத்தை தமிழோடு சேர்த்து உலகம் பூராவும் பரவச் செய்ததில் தமிழர்களின் பங்கு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு இந்த தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சேவையும் அளப்பரியது. இந்த சேவை தொடர்ந்து மென்மேலும் வளர்ச்சியடைய கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்துக்களும் விநாயகரின் ஆசியும் உரித்தாகட்டும்.

தேவஸ்தான பரிபாலனர்

Coventry Shri Sidhi Vinayagar Devasthanam is a registered charity in England and Wales.
Registration Number: 1144183

---



**தமிழ்க்கல்வி ஆராய்ச்சி மையம்**
Tamil Education and Research Centre-UK
1,Jacklin Drive, Coventry CV3 6QG West Midlands UK
web:www.tearc.org.uk email:info@tearc.org.uk tel:+44 7823 535 094/+44 7958 408 280
Affiliated to Coventry Tamil Welfare Association

கேடில் விழுச்செல்வம் கல்வி
Learning is excellence of wealth

**2018 தை முதல்**

பிரித்தானியாவில் இருந்து கொண்டே தமிழ் பல்கலைக்கழக பட்டப் படிப்புகளையும் பரீட்சைகளையும் செய்யக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு

B. A நடைமுறைத் தமிழ்,
B. A தமிழ்,
B.A பரதநாட்டியம்,
B.A சங்கீதம்,

மேலும் MA பட்டப்படிப்புகள், தமிழ் ஆசிரியர், இசை ஆசிரியர் பரத நாட்டிய ஆசிரியர், பட்டயப் படிப்புகள் (Diploma) என்பவற்றை ஐக்கிய இராச்சியத்தில் கற்பதற்கு வசதி செய்து தருகிறார்கள் கொமன்றி நலம் புரிச்சங்கத்தின் துணை நிறுவனமான தமிழ்க் கல்வி ஆராச்சி மையம்.

Tamil Education and Research Centre UK is affiliated to Coventry Tamil Welfare Association. Coventry Tamil Welfare Association is a registered as a Charity in England and Wales Registration No 10939924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்படிக விழா நனி சிறக்க ஆசிகள்

ஸ்படிக 15ம் ஆண்டு விழாவினைக் கொண்டாடும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினர்க்கு முதலில் எனது வாழ்த்துக்களும், ஆசிகளும் , பாராட்டுக்களும் உரித்தாகட்டும். ஸ்படிகம் என்பது எவ்வாறு அப்பளுக்கில்லாததாகவும், தன் மீது விழும் ஒளியை எங்கும் பரவச் செய்வதாகவும் சூழலில் உள்ள வெம்மையோ தண்மையோ இரண்டையும் ஏற்பதாகவும் தன் மீது படும் விம்பத்தின் வர்ணங்களை பிரதிபலிப்பதாகவும் இருப்பது போல இவ்வறக்கட்டளையம் அப்பழுக்கில்லாத சமூக சேவையோடும் தமிழர்கள் மீது அவர்கள் தம் நலன்களை பரவச் செய்வதாகவும் மக்கள் தம் சூழலில் உள்ள நன்மை தீமைகளை தன்னுள் கொண்டதாகவும் ஒவ்வொருவரினதும் எண்ண ஓட்டங்களை அவர்களுக்கே பிரதிபலிப்பதாகவும் இத்தனை ஆண்டுகளாக திறம்பட செயற்பட்டு மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது.

கொவன்றியில் தமிர்கள் மட்டுமன்றி மானிட சமூகத்தவர்களின் நலன் மீது அக்கறை கொண்டு சேவை செய்வது மட்டுமன்றி கலை, கலாச்சாரத், கல்வி, மொழி இன்னும் பிறவற்றிலும் சமூக டிபாறையோடு இந்த நிறுவனம் நடாத்தப்பட்ட வருகிறது. இந்நிறுவனத்தின் ஒரு அங்கமான ஒரு தமிழ்ப் பாடசாலை இன்று ஒரு கலாசாலையாக மிருருமளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. இத்தனை ஆண்டுகளில் ஏற்ற இறக்கங்களை சந்தித்தாலும் எந்த பிரிவினையும் ஏற்படுத்தாது சீரிய பாதையில் பயயணப்படுவதற்கு இவ் அறக்கட்டளையின் அங்கத்தவர்களும், உறுப்பினர்களும் நிர்வாகிகளும், இதன் தலைமையுமே காரணம். தலைமை எவ்வழியோ அவ்வழியே நிறுவனம் செல்லும். அந்த வகையில் இந்த நிறுவனத்தின் தலைவர் "சிவத்தமிழ்க் காவலர்" உயர்திரு. கந்தையா அரியரட்ணம் அமைந்திருப்பது மிகப்பெரிய வரப்பிரசாதம் ஆகும்.

இவ்வறக்கட்டளை சமூகப் பணியில் தன்னிகரில்லா நிறுவனமாக விளங்கவும் நூறாண்டுகளை கடந்து விளங்கவும் இதனோடு இணைந்து பயணிப்போர் நலன் பெறவும் முதல்வரும் நிர்வாகிகளும் நின்மதியோடும் உடல் நலத்தோடும் சுபீட்சமாக வாழவும் என்னையன் கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

வேதாகமவித்தகர்

**சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமார குருக்கள்**

பிரதமகுரு ஸ்ரீ கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

---

## An Appeal from the Chairman of Coventry Tamil Welfare Association

*– Sponsor a Child at Christu Illam (Home for Christ), of St Antony's College, Kayts, Sri Lanka.*

This is a personal appeal to you as you are very caring people and wanting to help those who are less fortunate due to circumstances. On the northern tip of Sri Lanka, in a place called Kayts, a school was founded in 1872 by Rev Boisseau, who had a vision for the children in this northern village of Sri Lanka. His work received the blessing of his Episcopal superior, the vicar apostolic of Jaffna, the Rev Christopher Bonjean.

Rev Fr Soundaranayagam (Former Bishop of Jaffna) was able to negotiate with the government authorities in Sri Lanka to release 500 young children from the Vanni IDP camp to be homed in the orphanages in the North of Sri Lanka. Out of them around 100 young children are homed in "Christ Hall" in Kayts. Since then, the number has risen to 160 (in the age group between 7 years and 15 years). But running a home for 160 children is a very responsible task and without sufficient funds, it is difficult to provide basic needs for the children. The journey of Rev Singarayar is arduous and painful. But undeterred by adversaries, he continues to provide care to these unfortunate children at Christu Illam.

It is obvious that if we want to help the poor, homeless and the under privileged people in this needy part of the world, we need many more people like Rev Fr Singarayar.

This is an appeal for people with good heart to come forward to sponsor a child at the Christu Illam. £10.00 per month will provide basic needs such as food. £20.00 per month will provide food, clothing and other basic needs for the child to grow and be educated. Please be generous and magnanimous and sponsor a child at the Christu Illam. It is a long-term commitment to help these children grow, receive education and fend for themselves.

If you would like to sponsor a child, please contact me on: **07823 535 094**

## தமிழ் உறவுகளிடம் ஓர் இரங்கல்,

வன்னி முகாமில் முள்ளுக்கம்பிக்குள் அடைபட்டிருந்த அநாதை சிறார்களில் 500 சிறார்களை வணக்கத்திற்குரிய பிதா சவுந்தரநாயகம் அவர்கள் முயற்சியால் முகாமில் இருந்து வெளியே கொண்டு வந்திருக்கிறார். இது வரவேற்கத்தக்க செயல். இந்த அநாதை சிறார்களில் 100 சிறார்களை ஊர்காவற்றுறையில் உள்ள அர்ச் அந்தோனியார் கல்லூரியால் நடாத்தப்படும் "யேசுநாதர் இல்லம்" (Christ Hall) ல் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கொவன்றி தமிழ் நலம் புரிச்சங்கம் ஏற்கனவே இந்த அநாதை இல்லத்திற்கு எங்களால் முடிந்தளவு உதவி செய்து வருவது அனைவரும் அறிந்ததே. முன் இருந்த 60 அநாதை சிறார்களுடன் தற்போது வன்னி முகாமில் இருந்து வந்த 100 அநாதை சிறார்களும் சேர்ந்து அன்பாக இருக்கிறார்கள்.

160 பிள்ளைகளை வாழ வைப்பதென்பது லேசான காரியம் இல்லை என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. சாதாரணமாக ஒரு பிள்ளைக்கு சாப்பாடு கொடுப்பதற்கு மாத்திரம் மாதத்திற்கு ஆகக் குறைந்தது 10 பவுண் **(£10.00)** தேவைப்படும். சாப்பாடும் உடு புடவையும் என்றால் ஆகக் குறைந்தது 20 பவுண் +20.00 மாதத்திற்கு தேவைப்படும். "வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் வழி வந்தவர்கள் தமிழர்கள். ஆகவே தோள் கொடுத்து ஆதரவற்றோர் என்ற நிலையை மாற்ற உங்களால் முடிந்தளவில் உதவி செய்யவும். உதவி செய்ய விரும்புவோர் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

மின் அஞ்சல்: coventrytamils2002@gmail.com

"தனக்குத் கிடைக்காதவற்றை பிறருக்கு ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் தானும் அடையும் திருப்தியே முழு திருப்தி"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Coventry Tamil Academy of Language & Arts 2016 - 17

## Gold Medallists

**Year – Reception**
1.Kaviyan SARVESWARAN
2.Matheeban SAVUNTHARARAJAN
3.Matheeran SAVUNTHARARAJAN
4.Mohnish Prathap JEGANESH
5.Sam Sirach NALLATHAMBY
6.Sujithakumar BALAMURALI

**Year 1**
1.Miss Menagaa SARVANANTHALINGAM
2.Miss Shuveeni ELAMURUGAN
3.Miss Sruthika SUBASH

**Year 2**
1.Miss Arathy SIYAMALAN
2.Miss Harini GANESAN
3.Miss Jananey KENTHESUVARAN
4.Miss Neha NEIL
5.Miss Nilanee KUGANATHAN
6.Miss Ratshiha THURAIVAN
7.Miss Saranya VASUDEV
8.Miss Yathurshanaa RAVIKANTHAN

**Year 3**
1.Dinashan SIVAPALAN
2.Hapisun SIVAPALAN
3.Miss Kamshika SARVESWARAN

**Year 4**
1.Latheshan KENTHESUVARAN
2.Madhav KETHEESWARARAJAN
3.Sriram GANESAN

**Year 5**
1.Miss Dansika BASKARAN
2.Miss Kamshana INDRANADAN
3.Miss Pavatharani SIVAKARAN

**Year 6**
1.Adcharon MUGUNTHAN
2.Methusan JEYAKANTHARAJA
3.Miss Sopiga RANJAN

**Year 7**
1.Miss Agshana MURALEETHARAN
2.Anushan MUKUNTHAN
3.Miss Lugirtha JUDE REMIGIUS
4.Miss Midhusha ELANGESHWARAN
5.Miss Rasitha SUTHANTHIRAKUMAR
6.Miss Varani SARAVANATHASAN
7.Vihashan VIJAYARATNAM

**Year 8**
1.Miss Ilakkiya RATNAM

## Silver Medallists

**Year – Reception**
1.Rushanth H.PIERIS
2.Miss Prasaani VICKNESWARAN
3.Miss Nivisha SRISKANTHARAJAH
4.Lourdeson JUDE REMIGIUS
5.Miss Anushaya H.PIERIS

**Year 1**
1.Miss Delaksana JEYAKUMAR
2.Jeisanth SATHYANATHAN
3.Kapis THAYAPARAN
4.Miss Solai MUTHUPALANIAPPAN

**Year 2**
1.Miss Ashvinii KALAIVENTHAN
2.Isaak NALLATHAMBY
3.Miss Kanagah SARVANANTHALINGAM
4.Miss Pavanila SIVAKARAN
5.Risath NALLATHAMBY
6.Miss Sarunja NEMINATHAN

**Year 3**
1.Jaswinan URUTHIRAN
2.Miss Kishaani SINNATHAMBI
3.Nethiran MUGUNTHAN
4.Miss Tanishka SIVA

**Year 4**
1.Abisen KIRUBAHARAN
2.Abishake SELVARAJAH
3.Avanissh KANESALINGAM
4.Miss Dilakshikkaa RANJAN
5.Jacinto Stewart JERCILINE SUNDAR
6.Miss Janani BALAMURALI
7.Mathusan MUKUNTHAN
8.Oviyan RATNAM
9.Miss Sarunja MURUGATHAS
10. Miss Thasika RAVINDRAN

**Year 5**
1.Arunan SIYAMALAN
2.Lathushan BASKARAN
3.Miss Prana KARTHIKESU
4.Ragithan SUTHANTHIRAKUMAR
5.Miss Sharusha ELANGESHWARAN
6.Yadunanthan RAVIKANTHAN
7.Miss Yuvastika THAYAPARAN

**Year 6**
1.Miss Chujaani SINNATHAMBI
2.Thipisan VICKNESWARAN

**Year 7**
1.Harish PRASANNA

**Year 8**
1.Miss Dilanuja MURUGATHAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIFE LINE PROTECT



# INSURANCE

IS THE ONE OF THE FOUNDATION BLOCKS OF ANY

## Financial Planning

**To Discuss Your INSURANCE needs - Please call**

**Shaji Jose - 07508 017328**
**Sopana Vathanamohan 07539 300839**

Legal & General
VitalityLife
AEGON
AVIVA
ZURICH
ageas
FriendsLife
LV= LIVERPOOL VICTORIA

## WE WORK WITH THE TOP INSURANCE COMPANIES IN UK

**We talk your language**

LifeLine Protect Limited is an appointed representative of Religare UK Limited which is authorised and regulated by the Financial Conduct Authority. Our FCA number is 607618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Thank you*

We sincerely thank
**O**ur Chief Guest,
**S**pecial Guest,
other guests
**A**ll our supports and advertisers
**S**SR Printers - Jaffna
**S**rinath Audio
**C**oventry City Council for their support
**W**illenhall Social Club
**Y**ogan Video & Photography
**S**hri Sidhi Vinayagar Devesthana Trustees
**M**angoes for the supply of food
**A**ll well wishes who contributed to advertishments
**C**TWA Executive Committee
**C**TALA Teachers & Students
**C**TWA Well-Wishers

---


**கொவன்றி தமிழர் நலன் புரிச் சங்கம்**
**Coventry Tamil Welfare Association**
WWW.tamils.org.uk
Emill: coventrytamils2002@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**Our Best Wishes to**
**Coventry Tamil Welfare Association**
**on their 15 Years of Achievement**



CHARLIE'S SUPER MARKET & CHARLIE'S TAKE AWAY

177 CHEVERAL AVENUE,

COVENTRY CV6 3EN





**Sri-lankan, South Indian, Halal**

**Delivery available on orders of £10 and over**

**(delivery fee £2, free when you spend £20 or more)**

TELEPHONE: 024 76276618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mango's

RESTAURANT & CATERERS

SRI LANKAN & SOUTH INDIAN FOOD

## COME ALONG AND ENJOY
# GREAT FOOD

Great Authentic and Traditional food always brings on a smile.
Cherish your relaxing time with our mouth watering SriLankan & Indian dishes.




256 Burnaby Road, Coventry CV6 4AY

## Restaurant Tel: 02477673003

Hall Booking: 07944008249 or 07872015560

DELIVERY & COLLECTION AVAILABLE 7 DAYS A WEEK, 12NOON - 12MIDNIGHT

Restaurant Opening Hours Monday - Friday : 3pm to 12 Midnight

JR Print. Tel: 0208 503 643


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org